**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**

**Deposition of Witness**

C.C. 85 /2015

PW-1 31-05-2024

| | |
|---|---|
| Name | குருநாதன் |
| Father's/Husband's Name | கிருஷ்ணசாமி |
| Village | தெற்குதிட்டங்குளம் |
| Taluk | கோவில்பட்டி |
| Caste | – |
| Calling | டிரைவர் |
| Religion | – |
| Age | 37 |

(Accused present)

**<u>முதல்விசாரணை</u>**

1) நான் கோவில்பட்டியில் வசிக்கிறேன். நான் டிரைவராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும் . நான் ஈச்சர் வாகனத்தில் மினரல் வாட்டர் சப்ளை செய்யும் தொழில் செய்து வருகிறேன்.

2) 12.04.2014 தேதி நானும் என்னுடன் பட்டில் சாட்சி 2 ராஜசேகர் என்பவரும் வாகனத்தில் தண்ணீர் கேன் ஏற்றிக்கொண்டு 12.30 மணிக்கு பசுவந்தனை ரோடு நாடார் மேல்நிலைப்பள்ளி எதிரே உள்ள கடையின் முன்பு தண்ணீர் கேன் இறக்குவதற்காக வாகனத்தை நிறுத்தினோம்.

3)அப்போது ஆட்டோ ஸ்டாண்டில் இருந்த ஆஜர் எதிரி வண்டியை எடுத்து ஓரமாக நிறுத்துமாறு கூறினார் நான் அப்போது கேனை இறக்கிவிட்டு ஓரமாக நிறுத்துகிறேன் என்று கூறினேன். அப்போது ஆஜர் எதிரி தேவிடியாமகனே வண்டியை ஓரமா நிறுத்த சொன்னா நிறுத்த மாட்டியா என்று ஆபாசமாக பேசினார்.

4) பின்பு அருகில் இருந்த லேத் பட்டறையில் இருந்து இரும்பு கம்பி எடுத்து தலையில் அடிக்க வந்தார் நான் வலது கையால் தடுத்த போது வலது கையிலும் மற்றும் இடது பக்க முகத்திலும் பட்டது. சம்பவத்தை பார்த்த என்னுடன் வந்த ராஜசேகரும் மற்றும் அருகில் இருந்தவர்களும் சத்தம் போட்டு விலக்கிவிட்டார்கள்.

5) போகும்போது ஆஜர் எதிரி என்னைப்பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்றும் எங்கள் ஏறியாவிற்கு வந்து என்னுடன் மோதுகிறாயா என்று மிரட்டினார். காயம்பட்ட நான் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் ஒருவாரம் சிகிச்சையில் இருந்தேன். எதிரி பொது இடத்தில் வைத்து என்னை ஆபாசமாக பேசியதால் எனக்கு கோபமும் மனஉளைச்சலும் ஏற்பட்டது. எதிரி என்னை மிரட்டியதால் எனக்கு பயம் வந்தது.

6)என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள குருநாதன் என்ற கையெழுத்து என்னுடையது. **அந்த புகார்வாக்குமூலம் முழுவதும் அசா ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**(குறுக்குவிசாரணை செய்ய எதிரிக்கு போதிய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை இல்லை என்று கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞரால் கூறப்பட்டது)**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.